தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, பங்குனி 11, திருவள்ளுவர் ஆண்டு—2048

2017 மார்ச் 24, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்."

உள்ளம் விரும்பி ஒருவருக்குப் பொருள்தந்து உதவுவதைக் காட்டிலும், முகம் மலர்ந்து இனிமையான சொற்களைப் பேசுவது மிகவும் உயர்ந்தது.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

(அ) ஒட்டன்சத்திரம், நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல் மற்றும் பரப்பலாறு அணையைத் தூர்வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.*

*__திரு. அர. சக்கரபாணி:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட கொத்தயம் என்ற இடத்தில், நல்லதங்காள் ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்காக, 3—6—2010—ல் எங்களுடைய தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் சுமார் 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணியில் 80 சதவிகிதம் முடிவுற்றுவிட்டது. அதிலே கொத்தயம் ஊராட்சிக்குட்பட்ட*

[திரு. அர. சக்கரபாணி] [2017 மார்ச் 24

83 ஏக்கர் நிலத்திற்கான பணம் கொடுக்கப்பட்டுவிட்டது; போடுவார்பட்டியைச் சேர்ந்த சுமார் 48 ஏக்கர் நிலத்திற்கு, கொத்தயம் பகுதிக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அதே அளவு பணம் வேண்டுமென்று போடுவார்பட்டியைச் சேர்ந்த விவசாயிகள் கேட்டு, பணம் கொடுக்காத காரணத்தால், 18 மாத காலங்களிலே முடிக்க வேண்டிய அந்தப் பணி இன்னமும் நிலுவையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய காலம் 18 மாதங்கள் ஆகும். 2012 ஆம் ஆண்டிலே அது முடிந்திருக்க வேண்டும். அந்தப் பணி முடிவடையாததால் ஐந்தாறு ஆண்டு காலமாக பெய்த மழையினால் கிடைத்த தண்ணீர் முழுவதும் வீணாகக் கடலிலே போய்க் கலந்துவிட்டது. அதனால், அங்கே இருக்கின்ற விவசாயிகளும், பொது மக்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். நமது தலைமைச் செயலாளர் அவர்கள் Commissioner of Land Administration–ஆக இருந்த சமயத்தில் நான் அவரை நேரடியாகச் சந்தித்தேன். உடனடியாக, மாநில அளவிலே, அதிகாரிகளை எல்லாம் வரவழைத்து, கூட்டத்தைக் கூட்டி, அதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். கொத்தயம் ஊராட்சிக்கு என்ன மதிப்பு, நிர்ணயிக்கப்பட்டதோ, அதையே போடுவார்பட்டிக்கும் தரலாம் என்று ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர், திருத்திய மதிப்பீடாக சுமார் 5 கோடி ரூபாயை நில உரிமையாளர்களுக்கும், இன்னும் செய்ய வேண்டிய பணிகளுக்கும் 5 கோடி ரூபாயையும் ஒதுக்கினால், அந்தத் திட்டத்தை விரைந்து முடிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசின் பொதுப் பணித் துறைச் செயலாளர் அவர்களுக்கு அந்தக் கோப்புகள் வந்திருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்து, உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டே பணியைத் தொடங்கினால் அந்தப் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயரும். தொப்பம்பட்டி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதி வறட்சியான பகுதியாகும். குடிநீருக்காக அங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். அதுமட்டுமல்லாமல்; விவசாயிகளும் பயனடைவர். எனவே, அந்தத் திட்டத்திற்கு உடனடியாக நிதி ஒதுக்கி, இந்த ஆண்டே அந்தப் பணியைத் தொடங்க முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று, பரப்பலாறு அணை. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மலைப் பகுதியில் அமைந்த பரப்பலாறு அணை 90 அடி கொள்ளளவு கொண்ட அணையாகும். அதிலே 50 அடி

2017 மார்ச் 24] [திரு. அர. சக்கரபாணி]

அளவுக்கு வண்டல் மண் படிந்திருக்கிறது. நீங்கள் 15—5—2015—ல் 19.5 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி இரண்டு ஆண்டு காலமாகியும் இன்னமும் தூர்வாருகின்ற பணி தொடங்கப்படாமல் இருக்கிறது. வனத்துறையின் Principal Chief Conservator of Forests அவர்கள் அதற்கு அனுமதி கொடுத்தால், அந்த வேலையை ஆரம்பித்துவிடலாம். ஏனென்றால், தற்சமயம் அந்த அணை வறண்டு விட்டது. அந்த அணையின் மூலமாக 10 குளங்கள் பயனடையக்கூடிய வகையிலே இருக்கின்றன. நங்காஞ்சி அணை இடையக்கோட்டையிலே சுமார் 40 கோடி ரூபாயில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அர. சக்கரபாணி, சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். இதுவும் முக்கியமானதுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றார்கள். நங்காஞ்சி அணை, 40 கோடி ரூபாயில் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் கட்டப்பட்டது. திண்டுக்கல் மாவட்டத்தில் 3,200 ஏக்கரும், கரூர் மாவட்டம், அரவக்குறிச்சியில் 3,000 ஏக்கரும் பாசன வசதி பெறக்கூடிய அந்த அணைக்கும் நீராதாரம் தரக்கூடியது பரப்பலாறு அணை. ஒட்டன்சத்திரம் நகராட்சி, ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட சுமார் 30 ஊராட்சிகள் குடிநீர் வசதி பெறக்கூடியதும் பரப்பலாறு அணை மூலம்தான். அது இன்றைக்கு தூர்வாரப்படாமல் இருக்கிறது. அந்த அணை வறண்டுவிட்டதால் தூர்வாரும் பணியை விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இரு பணிகளையும் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து, நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். நான் அதை 'தகவல் கோரல்' என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் ஓர் அணை குறித்துத்தான் கேட்டீர்கள்; தற்போது இரண்டு அணைகள் குறித்துக் கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொத்தயம் கிராமத்தில் நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ஏரி அமைக்கும் பணிக்காக 6 கோடியே 97

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2017 மார்ச் 24*

இலட்சம் ரூபாய் அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டம் கொத்தயம் மற்றும் போடுவார்பட்டி கிராமத்தில் 804 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வகையிலும், 576 மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யும் வகையிலும் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 20 ஏக்கர் புறம்போக்கு நிலத்தைத் தவிர, கொத்தயம் கிராமத்தில் 82.78 ஏக்கர் நிலமும், போடுவார்பட்டி கிராமத்தில் 48.72 ஏக்கர் நிலமும், ஆக மொத்தம், 131.50 ஏக்கர் பட்டா நிலங்கள் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்திற்கு 30–1–2015 அன்று 11 கோடியே 12 இலட்சம் ரூபாய்க்கு திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கி, தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டது.

முற்பகல் 10–05

தற்போது கொத்தயம் கிராமத்தில் 82.78 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. போடுவார்பட்டி கிராமத்தில் நில மதிப்பு நிர்ணயம் செய்தபோது, நில உரிமையாளர்கள் கூடுதல் இழப்பீடு கேட்ட காரணத்தினால் நேரடி பேச்சுவார்த்தைமூலம் 30–11–2016 அன்று திருத்திய நில மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டு, 48.72 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏரி அமைக்கும் பணியில் 50% பணி முடிக்கப்பட்டுள்ள நிலையில், நிலம் கையகப்படுத்தும் பணி முழுமையாக நிறைவு பெறாததால், இப்பணிக்கான ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இப்பணிக்கு இதுநாள் வரை நிலம் கையகப்படுத்துவதற்கு 5 கோடியே 25 இலட்சம் ரூபாயும், பணிகளுக்காக 4 கோடியே 61 இலட்சம் ரூபாயும், என ஆகமொத்தம், 9 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது, நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடையும் தருவாயில் இருப்பதால், இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் விரைந்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பரப்பலாறு அணையைத் தூர்வார வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)